**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.52** **நாள் : 23.01.2026**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் வாக்காளர் உறுதிமொழியினை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இன்று ஏற்றுக் கொண்டனர்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தேசிய வாக்காளர் தினத்தை (25.01.2026) முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் வாக்காளர் உறுதிமொழியினை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இன்று (23.01.2026) ஏற்றுக் கொண்டனர்.

**வாக்காளர் உறுதிமொழி**

"மக்களாட்சியின் மீது பற்றுடைய இந்தியக் குடிமக்களாகிய நாம், நம்முடைய நலன் கருதும் மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் மாண்பையும் நிலைநிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும், மதம், இனம், சாதி, வகுப்பு, மொழி ஆகியவற்றின் தாக்கங்களுக்கு ஆட்படாமலும் அல்லது எந்தவொரு தூண்டுதலுமின்றியும் வாக்களிப்போம் என்றும் உறுதிமொழிகிறோம்."

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திருமதி நா. பூஷ்ணாதேவி, உதவி ஆணையாளர் (பொது நிர்வாகம்) செல்வி உமா மகேஸ்வரி, இணை இயக்குநர் திரு.த.செந்தில்குமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**